3rd December 1970]

தலைவராக இருந்து வந்ததாலேயே அந்தக் கேந்திர ஸ்தானத்திற்கு ஒரு முக்கியத்துவம் கிடைத்தது. அவர் மாத்திரம் எர்ணாகுளத்திற்குச் செல்ல வேண்டிய அவசியமென்ன ? அதை எதிர்த்து நம் மாநில அரசு ஏன் போராடக் கூடாது ? எதிர்த்து ஏன் கருத்துத் தெரிவிக்கக் கூடாது ? இத்தனை ஆண்டுகளாக அந்த நிறுவனத்தின் தலைவராக இருந்து டோக்கியோவுக்கும் பிற நாடுகளுக்கும் சென்று புகழை உயர்த்திய பெரியார் அவர். அந்த நிலையம் மட்டும் மண்டபத்தில் இருக்கவும் அவர் அங்கே இருக்கக் கூடாது என்ற நிலைமையும் வந்தால், அந்தக் கேந்திரத்தின் முக்கியத்துவம் குறையும் அல்லவா ? ஆகையால் அவரையும் மண்டபத்திலேயே இழுத்து வைத்துக்கொள்ள மாநில அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் : இது வரையில் அந்தத் தலைவர் மண்டபத்தில்தான் இருக்கிறார் என்ற பெயரே தவிர, அவர் மாதத்தில் 25 நாட்கள் அங்கே இருப்பதில்லை. இந்தியாவின் பல்வேறு இடங்களில் பல மாநிலங்களில் அதனுடைய கிளைகள் இருப்பதால், அவர் டூரிங் ஆபிசராக இருந்து அங்கங்கே மாறி மாறிச் சென்று வருவார். எர்ணாகுளத்திற்குச் சென்றாலும், அங்கே மாதத்திற்கு ஐந்து நாட்கள்தான் இருக்க முடியும். அவர் எங்கேயிருந்தாலும், எல்லா இடங்களிலும் சரி பங்காகத்தான் செயல்பட வேண்டும். அப்படி அவர் எல்லா இடங்களிலும் செயல்படுவார்.

DEPUTY CHAIRMAN: The question is over.

(*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member).

II. ANNOUNCEMENTS

(1) *Message from the Governor*

MR. CHAIRMAN : I have received a message from the Governor of Tamil Nadu recommending to the Legislative Council the consideration of the Tamil Nadu Water Supply and Drainage Board Bill, 1970.

(2) *Messages from the Assembly*

MR. CHAIRMAN : I have received messages from the Hon. Speaker, Legislative Assembly, transmitting copies of the Tamil Nadu Prohibition (Amendment) Bill, 1970 (L.A. Bill No. 39 of 1970) and the Tamil Nadu Water Supply and Drainage Board Bill, 1970 (L.A. Bill No. 47 of 1970), as passed by the Legislative Assembly, and signed by him for the concurrence of the Council.